**கவனிக்க**.-2023.01.27 ஆந் திகதிய 2317 ஆம் இலக்க, வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2318 - 2023 පෙබරවාරි මස 03 වැනි සිකුරාදා - 2023.02.03

2318 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 42 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2023, பெப்புருவரி மாதம் 24ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, பெப்புருவரி மாதம் 10ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

41- B 082424 - 353 (2023/02)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68864.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NP/ 28/ 04/ 2/01/1119.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மன்னார் மாவட்டம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.எம்என்/125 இரட்டைக்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நரிக்காடு எனும் கிராமத்தில் அமைந்துள்ள குடியேற்ற உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 40 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக (ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் அமைப்பதற்கு) குத்தகைக்கு தருமாறு கேட்டு பரமநாதன் பாஸ்க்கரநாதன் விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது .

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி;
கிழக்கு : செட்டியார் கட்டையடம்பன் வீதி;
தெற்கு : மன்னார் மதவாச்சி வீதி;
மேற்கு : சிகையலங்கரிப்போர் சங்கத்திற்கு குத்தகையில் வழங்க ஒதுக்கப்பட்ட காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.11.30ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் ஆண்டில் காணியின் விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2021ஆம் ஆண்டிற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணி வர்த்தக நோக்கத்திற்காக (ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் அமைப்பதற்கு) நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/ மாகாணக்காணிஆணையாளர்/ பிரதிக்காணி ஆணையாளரின் மனம்திருப்தியுறும்வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்டசத்தில் குத்தக்கை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.30 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க் குத்தகை மற்றும் கைமாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக செலுத்தப்படாவிடில் 10% தண்டப்பணம் அறவிடப்படும்.

04. இக் குத்தகை வழங்கப்படக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

கே.ஜீ.பி. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.23.

02- 78

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68873.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NP/ 28/ 04/ 02/01/1298.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மன்னார் மாவட்டம், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.எம்என்/80 பெரியகடை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பெரியகடை எனும் கிராமத்தில் அமைந்துள்ள குடியேற்ற உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 80 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக (நண்டு வளர்ப்பிக்காக) குத்தகைக்கு தருமாறு கேட்டு ஜௌநாயகம் சுதர்சினி அவர்கள் விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது .

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : அரச காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : சதுப்பு நிலம்;
மேற்கு : உப்பளம்.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது..

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது வருடங்கள் (30) (2022.11.16ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- 2022 ஆம் ஆண்டில் காணியின் விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை.2021ஆம் ஆண்டிற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணி வர்த்தக நோக்கத்திற்காக (நண்டு வளர்ப்பு) நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/ மாகாணக்காணிஆணையாளர்/ பிரதிக்காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்டசத்தில் குத்தகை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.16 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை மற்றும் கைமாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக செலுத்தப்படாவிடில் 10% தண்டப்பணம் அறவிடப்படும்.

04. இக் குத்தகை வழங்கப்படக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

கே.ஜீ.பி. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.23.

02- 79

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62181.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NWP/ PLC/ L9/ WW/LTL/33.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 636/1 வண்ணாத்துவில்லு தெற்கு கிராம

அலுவலர் பிரிவினைச் சேர்ந்த வண்ணாத்துவில்லு என்னும் கிராமத்தில் குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட திட்டத்தின் 05 ஏக்கர், 02 றூட், 24 பேர்ச் அளவுடைய அரச காணியை விவசாய நடவடிக்கையின் பொருட்டு திரு. தொன் ஹரிச்சந்திர ஹிரிபிட்டிய அவர்கள் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : அரச காணி;
கிழக்கு : பாதை;
தெற்கு : அரச காணி;
மேற்கு : அரசகாணி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.06.09ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தின் 50% ஐ விட அதிகரிக்கப்படக் கூடாது.

*தவணைக் கட்டணம்:* வருடாந்தக் குத்தகைப் பணத்தைப் போன்று மும்மடங்காகும்.
*தண்டப் பணம்:* 2022 ஆம் வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத வியாபாரப் பெறுமதியின் 10% ஆகும்.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.06.09 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாக செலுத்துதல் வேண்டும் . குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

(ஐ) குத்தகைப் பணமானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியிருக்கும் நிலுவைக் குத்தகையின் பொருட்டு 10% தண்டப்பணமும் அறவிடப்படும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

டப்.ஆர்.ஏ.டீ.சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.21.

02- 80

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68990.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: சிபிசி/
எல்டி/4/1/27/329.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவின் எட்டவராஹேன ஈ 451 பி கிராம அலுவலர் பிரிவின் எட்டவராஹேன கிராம கெடஸ்தர பட இல. 310018 வலைய

இல. 03 தாள் இலக்கம் 06 இல் துண்டு இலக்கம் 121 கொண்ட அளவில் 10 ஏக்கர், 03 றூட் 17 பேர்ச் கொண்ட அரச காணியை வரையறுக்கப்பட்ட ட்ரம்ஸ் ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம் வணிக நோக்கங்களுக்காக நீண்ட கால குத்தகைக்கு கேட்டு விண்ணப்பித்துள்ளமையினை இத்தால் அறியப்படுத்துகின்றோம்.

02. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வடக்கு : துண்டு இலக்கம் 26,27,31,32,39 மற்றும் தனியார் காணி;
கிழக்கு : துண்டு இலக்கம் 35,122 மற்றும் தனியார் காணி;
தெற்கு : துண்டு இலக்கம் 34,35,36 மற்றும் 38;
மேற்கு : துண்டு இலக்கம் 32,38, 40 மற்றும் தனியார் காணி.

03. விண்ணப்பித்துள்ள காணியினை தேவைப்படும் காரணத்துக்காக குத்தகைக்கு கொடுப்பதற்கு முடியும். ஆதலால் அரசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியினை குத்தகைக்கு கொடுப்பதற்கு அரசு எண்ணியுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது வருடங்கள் (30) ( 2022.11.30ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள் முன்னால்);

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. ஐந்து மில்லியன் (ரூ.5,000,000.00) காட்டிலும் குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ்வருடத்தின் காணி சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபாய் ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) கூடும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ்வருடத்தின் காணி சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்தக் குத்தகைப்பணம் ஒவ்வொரு ஐந்து வருட காலத்துக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டியுள்ளதுடன் அது முந்தைய 05 வருட கால முடிவில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைத் தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

*தவணைப் பணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) இந்தக் காணியினை வணிக நோக்கங்களுக்கன்றி வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பித்த ஒரு வருடத்திற்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனதுக்குப் பிடித்தமான விதத்தில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக்காணிஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஏனைய விஷேட நிபந்தனைகளுக்கும் கீழ் இக் குத்தகை வரல் வேண்டும்.

(உ) நிர்மாணித்துள்ள கட்டிடங்கள் உகந்த அபிவிருத்தி நிலைமையின் கீழ் பேணி வரப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு விடப்பட்டுள்ள சமயத்தில் குத்தகைக்கு எடுப்போரினால் காணியினை பெற்றுக் கொண்ட விடயத்தினை பூர்த்தி செய்து கொள்வதற்கு குறிப்பிட்ட காலத்தினுள் முடியாது போனால் குத்தகையினை முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.30ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடியும் வரை இடை குத்தகைக்கு அல்லது மாற்றத்துக்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் தவறாது செலுத்த வேண்டியதுடன், குத்தகை மீறல் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் சுயமாகவே இரத்தாகின்றது. குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்படாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்திற்கு 10% தண்டப்பணம் அறவிடப்படும்.

(ஐ) கீழ்க் குறிப்பிடப்படும் தொல் பொருளியல் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

I. தொல்பொருள் தாக்க மதிப்பிடல் ஆய்வினை நடாத்தியிருப்பது பூமியின் மீது மாத்திரமாகும். திட்டமொன்றின் இடையில் தொல்பொருளியல் எச்சம் எதுவும் கிடைத்தால் தாமதமின்றி அது தொடர்பில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கு அல்லது உதவி பணிப்பாளர் (மத்திய) க்கு அறிவிக்க வேண்டும்.

II. அனுமதியற்ற தோண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட இடம் மற்றும் அதற்கண்மிய பகுதிகளில் தொல்பொருள் எச்சங்கள் காணக்கிடைப்பதால் பூமிக்கு அண்மையில் கட்டடடங்கள் கட்ட வேண்டுமானால் அதனோடு தொடர்புடைய திட்டத்துக்கு தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெறல் வேண்டும்.

III. அனுமதியின்றி தோண்டலுக்கு உள்ளடக்கப்பட்ட இடத்தினை தொல்பொருள் திணைக்களத்தில் மேற்பார்வையின் கீழ் மூடிவிடல் வேண்டும்.

IV. இத் திணைக்களத்தின் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு எந்த வேளையிலும் மேற்குறிப்பிட்ட இடத்தினை பரீட்சிப்பதற்கான அவகாசம் இருத்தல் வேண்டும்.

V. இப்பரிந்துரைவழங்கப்படுவது தொல்பொருள் பெறுமதி தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் மாத்திரம் ஆவதுடன் மக்கள் எதிர்ப்பு அல்லது சூழல் தாக்கம் தொடர்பில் தொல்பொருள் திணைக்களமோ அல்லது திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரோ பொறுப்புக் கூற மாட்டார்கள்.

04. இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து ஆறு(06) வார காலத்திற்குள் குறித்த காணியினை குத்தகைக்கு விடக்கூடாது என ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை எழுதி என்னிடத்தில் சமர்ப்பிக்கப்படாவிட்டால் விண்ணப்பத்தின் அடிப்படையில் காணி குத்தகைக்கு கொடுக்கப்படும்.

கே.ஜீ.பி. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.23.

02- 81

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67493.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: CPC/ LC/ LD/04/1/27/324.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், தம்புள்ள பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஈ. 453 அவுடங்காவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அவுடங்காவ கிராமத்தின் நில வரைபட இலக்கம் 310054 வலய இலக்கம் 2, காணித்துண்டு இலக்கம் 238, 239,236, 233, 263,258, 268 இல் காட்டப்பட்டுள்ளவாறு 01 ஏக்கர், 03றூட், 15.6 பேர்ச் அளவுடைய அரச காணித்துண்டினை வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு அழகக்கோன் அப்புஹாமிலாகே குணசிங்க என்பவர் நீண்ட கால குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 230,229,223,239;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 264, 234, 235;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 261, 262,281;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 241,242,257,255.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2022.09.20ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் மாறுபடாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.09.20 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாக செலுத்துதல் வேண்டும் . குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

(ஐ) குத்தகைப் பணமானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத

சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியிருக்கும் நிலுவைக் குத்தகையின் பொருட்டு 10% தண்டப்பணமும் அறவிடப்படும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

கே.ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.01.25.

02- 82

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2023 |
| | | வெள்ளி | 10.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2023 |
| | | வெள்ளி | 17.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2023 |
| | | வெள்ளி | 24.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.02.2023 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2023 |
| | | வெள்ளி | 10.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.02.2022 |
| | | வெள்ளி | 17.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2023 |
| | | வெள்ளி | 24.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2023 |
| | | வெள்ளி | 31.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2023 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 06.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2023 |
| | | புதன் | 12.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2023 |
| | | வெள்ளி | 21.04.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.04.2023 |
| | | வெள்ளி | 28.04.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.